மட்டக்களப்பு மாவட்டத்தின் 17 கமநல சேவைக் குழுக்கள் - 2023

----

1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 மட்டக்களப்பு மாவட்டத்தின் 17 கமநல சேவைக் குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 2023 ஆம் ஆண்டிற்குரிய மட்டக்களப்பு மாவட்டத்தின் 17 கமநல சேவைக் குழுக்களுக்குரியதாக விநியோகிக்கப்பட்ட 17 கணக்காய்வு அறிக்கைகள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அந்த 29 கமநல சேவைக் குழுக்களுக்காகவும் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்ததுடன் அதற்கான காரணங்களாக இருந்த பொருண்மையான குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

1.3 நிதிக் கூற்றுக்கள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	17 கமநல சேவைக் குழுக்களுக்கு உரிய காணி, அலுவலகக் கட்டிடம், உரக் களஞ்சியம் மற்றும் விற்பனை நிலையங்கள் போன்றவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	சொத்துக்களைக் கையேற்று சகல நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காணி, கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	ஆயித்தியமலை கமநல சேவைக் குழுவில் காணப்படுகின்ற 03 கணனி முறைமைகள், 04 புல் வெட்டும் இயந்திரங்கள், 03 எண்ணெய் விசிறும் இயந்திரங்கள், 04 நாற்றுக்கள் நடும் இயந்திரங்கள், 04 நெல் வீசிகள் (நேரடியாக நெல் விதைப்பு), 01 உழுந்து செதில் அகற்றும் உபகரணம், 01 டோசர் இயந்திரம் மற்றும் நிழற்பட பிரதி இயந்திரம் போன்றவற்றின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை.	எதிர்காலத்தில் பெறுமதிகளை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	ஆயித்தியமலை கமநல சேவைக் குழுவில் இரண்டு சக்கர உழவு இயந்திரத்தின் விற்பனைப் பெறுமதி ரூபா 542,134 நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை.	உழவு இயந்திர முற்பணத் தொகையை அறவிட்டு ஆணையாளருக்கு அனுப்பப்படும். எதிர் காலத்தில் பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்க நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய விற்பனைப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் சீராக்கி சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஈ)	வாகரை கமநல சேவை குழுவில் காணப்பட்ட 01 கணனி முறைமைகள், 01 டோசர், 11 புல் வெட்டும் இயந்திரங்கள், 01 நிழற்பட பிரதி இயந்திரம், 04 எண்ணெய் விசிறிகள், 03 கிருமிநாசினி விசிறிகள், 32 மின்சாரத்தில் எண்ணெய் விசிறும் இயந்திரங்கள், 02 கணனி மொனிட்டர்கள், 02 யூபிஎஸ், 01 திசை கருவி, 01 வைபை ரவுட்டர், 01 இரும்பு காப்பகம், 01 பூட்டு மற்றும் 01 கமநல வங்கி கருமபீடம் போன்றவற்றின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டின் காலப் பகுதியில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	மண்டபத்தடி சேவை அபிவிருத்தி குழுவின் மீளாய்வாண்டில் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடு ஒன்றில் காசு உட்பாய்ச்சலாக நிலையான வைப்புக்கள் 08 இன் வட்டி ரூபா 529,824 கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் நிதிச் செயலாற்றல் கூற்றில் நிலையான வைப்பு வட்டி வருமானமாக ரூபா 1,113,650 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் மூலம் ரூபா 583,826 வேறுபாடு கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஊ)	கொக்கட்டிச்சோலை கமநல சேவைக் குழுவின் நிலையத்தின் உழவு இயந்திரம், எண்ணெய் விசிறும் உபகரணங்கள், தண்ணீர்ப் பம்பி, தளபாடங்கள், கமரா, தொலைபேசி மற்றும் மின்சார விசிறிகளை உள்ளடக்கிய 07 இயந்திர	எதிர்வரும் நிதிக்கூற்றில் மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும்.	ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை

	உபகரணங்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து முடிவடைந்திருந்த போதும் அந்த சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவதுடன் அவற்றை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.		எடுத்தல் வேண்டும்.
(எ)	கொக்கட்டிச்சோலை கமநல சேவைக் குழுவிற்கு கிடைத்த மாணியத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 4,167,525 ஆன கட்டிடம் மற்றும் ரூபா 412,000 ஆன வீட்டுத் தோட்டம் மூலதனமாக்கப்பட்டு சொத்துக்களில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அந்த சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும்.
(ஏ)	கரடியனாறு கமநல சேவைக் குழுவில் மீளாய்வாண்டிற்குரிய ஏக்கர் வரி வருமானம் ரூபா 1,651,040 நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 1,508,058 ஆக காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் ஏக்கர் வரி வருமானம் ரூபா 142,982 இனால் குறைத்துக் காணப்பிக்கப்பட்டிருந்தது.	ஏக்கர் வரித் தொகையின் பெறுவனவுகள் கணக்கீடு செய்து வருடாந்த அறிக்கையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பரீட்சித்து சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஐ)	கல்லடி கமநல சேவைக் குழுவின் நியம கட்டுப்பாட்டு ஆய்வுகூட வருமானத்தில் கடந்த ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 420,495 ஊக்குவிப்புப் படி காசு அடிப்படையில் வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் செலவினம் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகளில் சரியான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஒ)	கல்லடி கமநல சேவைக் குழுவின் கிரயம் ரூபா 3,067,900 ஆன நியம கட்டுப்பாட்டு ஆய்வுகூட உபகரணங்களின் மீளாய்வாண்டில் பெறுமானத் தேய்வு செய்யப்படாமையால் தேறிய மிகை ரூபா 306,790	எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறுமானத் தேய்வு பெறுமதி கணக்கீடு செய்து உரிய பிரகாரம் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

	இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.		
(ஓ)	கல்லடி கமநல சேவைக் குழுவின் மீளாய்வாண்டிற்கு உரிய 04 கட்டிடங்களின் ஆதனவரி ரூபா 9,896 மற்றும் செலுத்த வேண்டிய ஆதனவரி ரூபா 203,906 நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அந்த மீதிகளைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஔ)	தான்தாமலை கமநல சேவைக் குழுவின் கடந்த காலத்தில் காணப்பட்ட யுத்தத்தால் சொத்துக்கள் மற்றும் உபகரணங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் முறையே ரூபா 1,834,050 மற்றும் ரூபா 252,862 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 2,086,912 காண்பிக்கப்பட்டமையால் நடைமுறையல்லாச் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	கமநல அபிவிருத்தி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற்று குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	முறையான பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிதிக் கூற்றுக்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(க)	தான்தாமலை கமநல சேவைக் குழுவின் கமநல காப்புறுதி சபை வருமானம் ரூபா 2,165,287 நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய வருமான பெறுமதி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(கா)	ஏறாவூர் கமநல சேவை குழவில் கடந்த ஆண்டுகளில் நன்கொடையாகக் கிடைக்கப் பெற்ற அலுவலக தளபாட விடயங்கள் 82 இன் பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் சொத்துக்களாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர் வரும் நிதிக் கூற்றுக்களில் சொத்தாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறுமதிகளை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(கி)	2008 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கலவரத்தினால் இழப்புக்கு உட்பட்ட ஏறாவூர் கமநல சேவைக் குழுவின் நிலையத்திற்குரிய ரூபா 459,562 ஆன 66 நடைமுறையல்லாச் சொத்து விடயங்கள் தொடர்பாக பொலிஸ் இல் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதும் அது	எதிர் வரும் நிதியாண்டுகளில் பிரதி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற்று பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப் பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்து பதிவளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.		
(கீ)	காத்தான்குடி கமநல சேவைக் குழுவினால் காணி பகுதி ஒன்று வாடகைக்கு வழங்கியதால் வாடகையாளரிடம் இருந்து பெற வேண்டி இருந்த ரூபா 105,000 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தின் போது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பெற வேண்டிய தொகைகளை கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(கு)	வாழைச்சேனை கமநல சேவைக் குழுவிற்கு கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து வழங்கப்பட்ட தொலைக்காட்சி இயந்திரம், தண்ணீர்ப் பம்பி, பைபர் கிளாஸ் இயந்திரம் (Fiber Glass Machine), புல் வெட்டும் இயந்திரம் (Chopping Machine), மற்றும் கூறுகளாக்கும் இயந்திரம் மற்றும் அரைக்கும் இயந்திரம் (Shread Machine) போன்றவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.	இவற்றை மீண்டும் கமநல சேவை அபிவிருத்தித் திணைக்களத்திற்கு மீள வழங்குவதற்கு முடியுமாக இருந்தமையால் இப்பெறுமதிகள் எங்களின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த முடியாது இருந்தது.	பெறுமதிகளை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.3.2 அதிகாரப் பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	காத்தான்குடி கமநல சேவைக் குழுவினால் முறையான அங்கீகாரம் இன்றி சேகரிக்கப்பட்ட காசு வாடகை ஒவ்வொரு ஆண்டிலும் அந்த நிதிக் கூற்றுக்களில் வருமானமாகக் காண்பிக்கப்பட்டவுடன் அந்த வருமானம் குழுவின் செலவினமாக பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும் கூட்டுமொத்தமாக ரூபா 1.5 மில்லியன் தொகை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் 06 சந்தர்ப்பங்களின் போது இலங்கை வங்கியின் நிலையான வைப்பின் கீழ்	அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இந்தப் பணத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இந்தப் பணத்தை பயன் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் இதற்குரிய வட்டி குழுவின் நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்டு செலவினங்களை தீர்த்து வைப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது.		
(ஆ)	அரசாங்கத்தின் காணிக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பழுகாமம் கமநல சேவைக் குழுவிற்கு கையளிக்கப்படாத 0.6514 எக்கர் அரசாங்கத்தின் காணி, கமநல சேவை பிரதி ஆணையாளரால் இரண்டு நபர்களுக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் 30 வருடங்களுக்கு அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்திற்கு இணங்க வாடகைக்கு வழங்கி கமநல அபிவிருத்திக் குழுவின் மீளாய்வாண்டில் ரூபா 60,000 சட்டத்திற்கு முரணாக வருமானம் உழைக்கப்பட்டிருந்தது.	பிரதி ஆணையாளரின் அங்கீகாரத்துடன் இந்தக் காணி வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.	அரசாங்கத்தின் காணிக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலத்த வேண்டிய கணக்குகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	09 கமநல சேவை குழுக்களின் விவசாய அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட இரண்டு சக்கர உழவு இயந்திரம் மற்றும் உபகரணங்களுக்கு உரிய ரூபா 4,985,434 நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கோ அல்லது சொத்துக்களை மீண்டும் கையேற்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கோ அல்லது சொத்துக்களை மீள கையேற்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	ஆயித்தியமலை, ஏறாவூர் மற்றும் கொக்கட்டிச்சோலை கமநல சேவைக் குழுக்களில் கூட்டுமொத்தமாக ரூபா 2,150,065 செலுத்த வேண்டிய மீதி நீண்டகாலம் முதல் செலுத்தித் தீர்த்து	கணக்கு மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(இ)	நிலைபேறான விவசாய முகாமைத்துவ திட்டத்தின் கீழ் கல்லடி கமநல சேவைக் குழுவிற்கு விவசாய அமைச்சினால் 2010 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சூரியவலுவில் செயற்படுகின்ற தண்ணீர்ப் பம்பி தவணை அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கி 11 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அவர்களிடம் இருந்து பெற வேண்டியிருந்த ரூபா 9,673,779 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பணத்தை அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	கிரான் கமநல சேவைக் குழுவினால் நீண்ட காலம் முதல் நமைுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய 06 உழவு இயந்திரங்கள் மற்றும் விவசாய உபகரணங்களுக்கான ரூபா 755,000 மீதியை செலுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	உழவு இயந்திரங்களின் தவணைப் பணம் நீண்ட காலம் முதல் செலுத்தப்படாது இருந்தமையால் அவற்றைக் கையேற்பதற்கோ அல்லது பதிவளிப்பதற்கோ நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட அலுவலகத்திற்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	உழவு இயந்திரங்களின் தவணைப் பணத்தை அறவிடுவதற்கு/ கையேற்பதற்கோ அல்லது முறையான அங்கீகாரத்தின் கீழ் பதிவளிப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	04 கமநல சேவைக் குழுக்கள் பலவருட காலம் முதல் முன்கொண்டு வரப்படுகின்ற அறவிடப்படாது காணப்படுகின்ற ரூபா 2,828,118 நிலுவை மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை.	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	கிரான் கமநல சேவைக் குழுவினால் ''அறுவடையின் பின்னர் முழுமையாக தீர்த்து வைத்தல் வேண்டும்'' என்ற	பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	நிபந்தனையின் அடிப்படையில் கடந்த வருடங்களில் நிலையத்தால் 84 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட இரசாயணப் பொருட்கள், உர மாணியக் கடன், அதிக விலையுள்ள உரக் கடன், விதை நெல் கடன் மற்றும் சேதனப் பசளை கடன்களில் அறவிட வேண்டியிருந்த கூட்டுமொத்தமான ரூபா 3,203,995 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இருந்ததுடன் வழங்கப்பட்ட கடனுக்காக கடன் பேரேடும் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.		
(எ)	கொக்கட்டிச்சோலை கமநல சேவைக் குழுவினால் 2022 ஆம் ஆண்டில் கமநல அமைப்புக்களுக்கு வழங்கப்பட்ட விவசாய இரசாயண பொருட்கள் மற்றும் விவசாய உள்ளீட்டுகளுக்காக பெற வேண்டிய ரூபா 312,950 மற்றும் 2019 ஆம் ஆண்டில் 06 விவசாய அமைப்புக்களுக்கு வழங்கப்பட்ட உரக் கடன் ரூபா 320,000 என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஏ)	கொக்கட்டிச்சோலை கமநல சேவைக் குழுவினால் கமநல அமைப்புக்கள் இரண்டில் இருந்து அறவிட வேண்டிய விவசாய இரசாயணக் கடன் ரூபா 246,825 நிலையத்தில் சேவையாற்றிய உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணம் மீளாய்வாண்டு வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	நிலுவைப் பணம் உரிய உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஐ)	03 கமநல சேவைக் குழுக்களினால் உழவு இயந்திரம் மற்றும் விவசாய உபகரணங்களின் தவணைப் பணமாக ரூபா 1,477,134 தொகை உரிய தரப்பினருக்கு செலுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் செலுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	குறித்துரைத்த காலத்தில் பொறுப்புக்களைச் செலுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஒ)	கரடியனாறு கமநல சேவைக் குழுவினால் யூரியா உர விற்பனையில் இருந்து கிடைத்த ரூபா 1,742,000 தொகை தேசிய உர செயலகத்திற்கு செலுத்தி தீர்த்து வைப்பதற்கு கடந்த 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	தேசிய உர செயலகத்தால் கோரப்படுமாயின் அந்த பணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	குறித்துரைத்த காலத்தில் பொறுப்புக்களைச் செலுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஓ)	பழுகாமம் கமநல சேவைக் குழுவினால் கடன் அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விவசாய உரம் மற்றும் விவசாய உள்ளீடுகளுக்காக அறவிட வேண்டிய ரூபா 616,814 தொகையினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டு வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஔ)	வாழைச்சேனை கமநல சேவைக் குழுவினால் 2021/2022 பெரும் போகத்தில் மிகுதியாகக் காணப்பட்ட யூரியா உரம் சோளப் பயிர் செய்கையில் ஈடுபட்டிருக்கின் விவசாயிகளுக்கு ரூபா 2,244,021 தொகையில் விற்பனை செய்யப்பட்டிருந்த போதும் அந்தப் பணம் உர செயலகத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஆணையாளரின் ஆலோசனை கிடைக்காமையினால் இந்த பணம் உர செயலகத்திற்கு மீண்டும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.	குறித்துரைத்த காலத்தில் பொறுப்புக்களைச் செலுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(க)	மண்டபத்தடி கமநல சேவைக் குழுவினால் 2015 ஆம்	கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடனை அறவிடுவதற்கு

	ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலப் பகுதியில் கடன் அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விவசாய உரம் மற்றும் விவசாய உள்ளீடுகள் ரூபா 8,110,007 கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்களால் மீளாய்வாண்டு வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.		நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(கா)	விவசாய அமைச்சினால் 2010 ஆம் ஆண்டில் நிலைபேறான விவசாய முகாமைத்துவத் திட்டத்தின் கீழ் சூரிய வலுவில் செயற்படுகின்ற ரூபா 6,210,000 பெறுமதியான தண்ணீர்ப் பம்பி தவணை அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கியதன் மூலம் அவர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 6,009,200 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மண்டபத்தடி கமநல சேவைக் குழுவில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(கி)	வெல்லாவெளி கமநல சேவைக் குழுவினால் 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலப் பகுதியில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 3,533,525 ஆன விவசாய உரம் மற்றும் விவசாய உள்ளீடுகள் மீளாய்வாண்டு வரை கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்களினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.	கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.3.4 கணக்காய்விற்கான எழுத்து சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
05 கணக்கு விடயங்களுக்கு உரிய கூட்டுமொத்தமான ரூபா 22,362,532 மீதியை	கடன்பட்டோர் பட்டியல், பட்டோலைகள், உறுதிப்படுத்தும் கடிதங்கள்	பட்டோலைகள், உறுதிப்படுத்தல் கடிதங்கள் மற்றும்

உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கணக்காய்விற்கு கோரப்பட்ட சான்றுகள் சமர்ப்பிக்கப் படாமையினால் அந்த விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த / ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.	மற்றும் விரிவான அட்டவணைகள் போன்றவை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	விரிவான அட்டவணைகள் மற்றும் சகல சான்றுகளும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு		இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம்			
(i)	44(1) ஆம் பிரிவு	சகல கமநல சேவை அமைப்புக்களினதும் கணக்குகளும் ஆணையாளர் நாயத்தினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் பரீட்சிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்ட போதும் 14 கமநல சேவைக் குழுக்களின் கணக்குகள் ஏற்பாடுகளின் பிரகாரம் பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை.	சகல கமநல சேவை அமைப்புக்களினதும் கணக்குகளை பரீட்ச்சிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	55(1) ஆம் பிரிவு	02 கமநல சேவைக் குழுக்களால் வயல் காணிகளை அளவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் காணிகளை அளப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(ஆ)	2018 ஏப்ரல் 20 ஆம் திகதிய இலக்கம் 5/2018 என்ற கமநல அபிவிருத்தி ஆணையாளரின் சுற்றறிக்கை	12 கமநல சேவை குழுக்களால் அதிகார பிரதேசத்தில் காணப்படுகின்ற தரிசு நிலங்களின் பெயர் பட்டியலை உள்ளடக்குவதற்கு	மேட்டு நிலம், மேட்டுக் காணிகளின் பெயர் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.		
(இ)	2002 நவம்பர் 28 ஆம் திகதிய இலக்கம் IAI/2002/02 என்ற திறைசேரி சுற்றறிக்கை	04 கமநல சேவைக் குழுக்களால் கணனிகள் மற்றும் கணனித் துணைப் பாகங்களை பதிவேடுகளுக்கு கொண்டு வந்து பதிவேடு ஒன்றைப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	பதிவேடுகளைப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பதிவேடு ஒன்றைப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	1979 இன் 58 ஆம் இலக்க கமநல சேவைச் சட்டத்தின் கீழான சுற்றறிக்கையின் 107 இன் 15 ஆம் பிரிவு	03 கமநல சேவைக் குழுக்களினால் பொதுப் பேரேடு மற்றும் நாட்குறிப்புப் பதிவுகள் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர் காலத்தில் பொதுப் பேரேடு மற்றும் நாட்குறிப்புக்களை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுப் பேரேடு மற்றும் நாட்குறிப்புக்களை ப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	அரசாங்கத்தின் நிதி சுற்றறிக்கை இலக்கம் 10/2020 மற்றும் நிதிப்பிரமாணம் 756(6)	15 கமநல சேவைக் குழுக்களால் இருப்பு விடயங்களில் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் இருப்பு விடயங்களில் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டம்	09 கமநல சேவைக் குழுக்களால் ரூபா 25,000 தொகைக்கு மேற்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பாக முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை			

(i)	நிதிப்பிரமாணம் 110	09 கமநல சேவைக் குழுக்களினால் இழப்பு தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை.	இழப்பு தொடர்பான பதிவேடு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் 262(ii)	12 கமநல சேவைக் குழுக்களினால் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் ''கொடுப்பனவு செய்யப்பட்டது'' என்ற முத்திரை இடப் பட்டிருக்கவில்லை.	கொடுப்பனவு பட்டியல் மற்றும் துணை ஆவணங்கள் யாவற்றிலும் ''கொடுப்பனவு செய்யப்பட்டது'' என்ற முத்திரை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(iii)	நிதிப்பிரமாணம் 384	13 கமநல சேவைக் குழுக்களினால் காசோலை கையேற்றல் மற்றும் காசோலை வைத்துக் கொள்ளல் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் பதிவேட்டைப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(iv)	நிதிப்பிரமாணம் 452(1)	06 கமநல சேவைக் குழுக்களினால் கணக்காய்வு ஐயவினாப் பதிவேடு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தின் போது பதிவேட்டைப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(v)	நிதிப்பிரமாணம் 454 (2)	04 கமநல சேவைக் குழுக்களால் மின் பொருத்திகளின் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் பதிவேட்டைப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(vi)	நிதிப்பிரமாணம் 502(2)	03 கமநல சேவைக் குழுக்களினால் நிலையான சொத்து பதிவேடு பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் அவை பௌதீக ரீதியிலும் பரீட்சிக்கப்பட்டிருக்க	எதிர்காலத்தில் பதிவேட்டைப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி

		வில்லை		
(vii)	நிதிப்பிரமாணம் 880	12 கமநல சேவைக் குழுக்களினால் நிதிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணைப்பணம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	மேற்படி
(viii)	நிதிப்பிரமாணம் 891	15 கமநல சேவைக் குழுக்களின் நிலையங்களினால் பிணைப் பதிவேடு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	பிணைப் பதிவேட்டைப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

(அ) மீளாய்வாண்டில் 17 கமநல சேவைக் குழுக்களின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 27,149,231 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 8,767,326 ஆகும். இதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 18,381,905 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு வயல் காணிகளில் ஏக்கர் வரி வருமானம், உர விற்பனை மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் போன்றவை அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் 17 கமநல வங்கிகளின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,523,305 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,136,839 ஆகும். இதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,386,466 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு விவசாய கடன் வட்டி வருமானம் பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	12 கமநல சேவைக் குழுக்கள் அமைந்துள்ள காணிகளின் உரித்து கையேற்பதற்கு கமநல சேவைக் குழுவினால் கணக்காய்வுத் திகதியான 2024 மே 10 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க	நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	காணியைக் கையேற்பதற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வில்லை.

(ஆ)	மண்டூர் கமநல சேவைக் குழுவின் எல்லைக்கு அண்மையில் 2,000 ஏக்கர் பரப்பளவை உடைய வயல் காணி, நிலையத்திற்கு உரிய வயற்காணிப் பதிவேட்டில் பதியப்படாமையினால் அந்த காணிகளுக்குரிய ஏக்கர் வரித் தொகை மீளாய்வாண்டு வரை நிலையத்திற்கு அறவிட முடியாமல் காணப்பட்டது.	பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டிருந்த காணிகளில் இருந்தும் உரித்துக் கிடைக்காத நபர்களின் காணிகளில் ஆவணங்கள் காணப்படாமையினால் பதிவேடுகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.	சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2018 ஏப்ரல் 20 ஆந் திகதிய 05/2018 என்ற கமநல அபிவிருத்தி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நிரப்பல் காணி, நிரப்பல் காணிப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் வெல்லாவெளி கமநல சேவைக் குழுக்கள் எந்த ஒரு நிரப்பல் காணியும் மீளாய்வாண்டு வரை பதிவேடுகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக நிரப்பல் காணி பதிவேடுகளுக்கு கொண்டு வருவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் காணி மற்றும் வயல்காணி பதிவேட்டில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	கரடியனாறு கமநல சேவைக் குழுவினால் 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 1,322,956 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட யூரியா உரம் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணம் கமநல சேவை அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து மீளளிப்புச் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் இருந்து மீளளிப்புச் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	பணத்தை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	வெல்லாவெளி கமநல சேவைக் குழுவினால் 2007 முதல் 2009 வரையான காலப் பகுதியில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விவசாய உரங்களுக்கு உரியதாக கிடைக்க வேண்டிய	கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	பணமாக ரூபா 415,639 மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் உரிய கடன் தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு கடன் பணம் கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்களினால் விவசாயிகளிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.		
(ஊ)	வந்தாறுமூலை கமநல சேவைக் குழுவினால் ரூபா 187,406 செலவில் 2021 ஆம் ஆண்டில் சேதனப் பசளை உற்பத்தித் தளம் ஒன்று அமைக்கப்பட்டு அதற்குரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் தளம் உடைத்து அகற்றப்பட்டு அதில் புதிய கட்டடம் ஒன்று நிர்மானிக்கப்பட்டிருந்தது. முகாமைத்துவ செயற்திறனின்மையின் காரணமாக மேற்கூறப்பட்ட செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் நோக்கம் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை.	புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக அந்தக் கட்டிடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.	உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 இனங்காணப்பட்ட நட்டம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஆயித்தியமலைக் கமநல சேவைக் குழவினால் ரூபா 100,536 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட இரசாயனப் பொருட்கள் காலாவதியாகி இருந்த போதிலும் அவற்றை அழிவடையச் செய்வதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	பதிவழிப்பதற்கு மாவட்ட ஆணையாளரின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் 102 முதல் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2009 ஆம் ஆண்டில் காணப்பட்ட சிக்கலான நிலமையின் காரணமாக தாந்தாமலை கமநல சேவைக் குழுவின் சொத்துக்களுக்கு	தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி

	ஏற்பட்ட நட்டம் ரூபா 2,086,912 இற்காக பொலிஸ் இல் முறைப்பாடு செய்திருந்த போதிலும் கடந்த 14 வருட காலமாக அதனைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(இ)	வாழைச்சேனை கமநல சேவைக் குழுவினால் 2023 ஆம் ஆண்டில் சிறு போகத்தில் நெல் பயிர்ச் செய்கைக்காக உரம் அரசாங்க நிறுவனங்களில் இருந்து கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் தனியார் நிறுவனங்களில் இருந்து உரம் கொள்வனவு செய்யப்பட்டமையால் நிலையத்திற்கு ரூபா 500,000 நட்டம் ஏற்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் அரசாங்கத்தின் நிறுவனங்களில் இருந்து உரத்தைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அரசாங்க நிறுவனங்களில் இருந்து உரத்தைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கல்லடி கமநல சேவைக் குழுவின் நியம கட்டுப்பாட்டு ஆராய்ச்சிக் கூடத்தின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 115,088 தேறிய நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் அதற்கு எதிராக கடந்த ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 69,053 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 184,141 வீழ்ச்சி காணப்பட்டது.	எதிர்காலத்தில் இலாபத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இலாபத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய இலக்கம் SP/RD/02/10 என்ற சனாபதி செயலகத்தின் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் காத்தான்குடி கமநல சேவைக் குழுவினால் அறவிடப்படுகின்ற அறை வாடகையின் அளவு கால ரீதியில் மதிப்பீடு செய்து வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க	எதிர்காலத்தில் குறித்துரைத்த நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	வில்லை.		
(இ)	கொக்கட்டிச்சோலை கமநல சேவைக் குழுவில் 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,428,200 பெறுமதியான கிலோகிராம் 25 ஆன யூரியா உரத்தில் 74 மூட்டைகள் மீளாவாண்டு வரையும் விற்பனை செய்வதற்கோ அல்லது வழங்குனருக்கு மீள அனுப்புவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர் வரும் காலத்தின் போது குறித்துரைத்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	விற்பனை செய்வதற்கோ அல்லது வழங்குனருக்கு மீள அனுப்புவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	மண்டபத்தடி கமநல சேவைக் குழுவிற்கு மிளாய்வாண்டில் கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற கிலோ கிராம் 50 நிறையான அலகொன்று ரூபா 9,000 பெறுமதியான யூரியா உரத்தில் 426 பொதிகள் கமநல சேவை நிலையத்தில் காணப்படும் போது மீளாய்வாண்டில் 50 கிலோகிராம் நிறையுடைய யூரியா உர மூட்டைகள் 1,000 கமநல சேவை நிலையத்தால் கொள்வனவு செய்து விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற யூரியா உரம் விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்கு முன்னுரிமை வழங்காமையினால் அந்த உரம் களஞ்சியத்தில் விற்பனை செய்யப்படாமல் காணப்பட்டது.	இது தொடர்பான நடவடிக்கைகள் எதிர் காலத்தில் எடுக்கப்படும்.	உரிய பிரகாரம் குறித்துரைத்த விலையில் விற்பனை செய்யப்படல் வேண்டும்.
(உ)	வாகரை கமநல சேவை குழுவினால் மீளாய்வாண்டில் காணி ஏக்கர் 10,921 இல் இருந்து ரூபா 873,705 ஏக்கர் வரி தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	நிலுவை ஏக்கர் வரி பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஏக்கர் வரி குறித்துரைத்த பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	வாகரை கமநல சேவைக் குழுவினால் விவசாயி ஒருவருக்கு 2010 ஆம்	இந்தக் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்

	ஆண்டின் போது வழங்கப்பட்ட இரண்டு சக்கர உழவு இயந்திரத்தில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 180,000 கடன் மற்றும் 2011 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட விவாசயக் கடன் ரூபா 10,000 தொகை என்பன 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.		வேண்டும்.
(எ)	வாழைச்சேனை கமநல சேவைக் குழவினால் 2023/2024 இன் பெரும் போகத்தில் நெற் பயிர்ச் செய்கையின் போது 02 ஏக்கரை விட குறைந்த வயற் காணிகளுடனான விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றிற்கு ரூபா 15,000 வீதமான அடிப்படையில் மானியம் வழங்க வேண்டியிருந்தது. 0.4 முதல் 2 ஏக்கர் வரையான வயற்காணிகளுடன் உள்ள 06 விவசாயிகளுக்கு ரூபா 157,500 செலுத்த வேண்டியிருந்த போதும் அவர்களுக்கு ரூபா 87,000 மானியத் தொகை மாத்தரம் நிலையத்தால் வழங்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தின் போது இவ்வாறு இடம்பெறாமல் இருப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய காணிகளின் அளவிற்கு சரி சமமான வகையில் மானியம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 நிதியத்தின் குறைவான பயன்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வறுமையான விவசாயிகளின் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் கையளிப்பதற்காக கமநல அபிவிருத்தி நிறுவனங்களிடம் இருந்து நன்கொடையாகப் பெற்று நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட பணம் மற்றும் அதன் மூலம் இதுவரை உழைக்கப்பட்ட வட்டி வருமானத்தை உள்ளடக்கிய கூட்டுமொத்தமாக ரூபா 2,747,911 தொகை நீண்ட காலம் முதல் 05 கமநல சேவைக் குழுக்களால் எந்தவொரு புலமைப் பரிசிலும்	நிதியத்தைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதியத்தை உரிய நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	கையளிக்கப்படாமல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	பசுமை வீட்டுத் தோட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 412,000 வீதம் ரூபா 1,236,000 தொகை 03 கமநல சேவைக் குழுக்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதியேற்பாடுகளில் ரூபா 517,745 பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.	வருமானத்தை உழைப்பதற்கு முடியுமான பிரகாரம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிர்மாணிக்கப்பட்ட பசுமை வீட்டு தோட்டம் மற்றும் கிடைக்கப் பெற்ற பணம் ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 விளைவற்ற/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சேதனப் பசளை உற்பத்திக்காக கிழக்கு மாகாண ஆளுனரால் கமநல சேவைக் குழுக்களுக்கு புல்வெட்டும் இயந்திரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவை சேதனப் பசளை உற்பத்திக்காக விவசாயிகளுக்கு வழங்குவதற்கோ அல்லது பசளை உற்பத்திக்காக பயன்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்காமல் விளைவற்றுக் காணப்பட்டது.	ஆளுனருக்கு மீள அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்கள் உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது 09 கமநல சேவைக் குழுக்களுக்கு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் ரூபா 2,989,751 நிதியேற்பாடு ஒதுக்கி பசுமை வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை எந்த ஒரு உற்பத்தி செயற்பாடுகளுக்காகவும் ஈடுபடுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.	அந்த செயற்திட்டத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் மற்றும் வருமானத்தை உழைப்பதற்கு முடியாமல் இருந்தது.	பசுமை வீடுகளைப் பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	மண்டபத்தடி கமநல சேவைக் குழுவிற்குரிய டோசர் இயந்திரம் 2013 ஆம் ஆண்டு முதல் செயலிழந்து காணப்பட்டதுடன் அந்த இயந்திரத்தில் இருந்து எந்த ஒரு வருமானமும் 2013	அந்த இயந்திரத்தை பழுது பார்க்க முடியாத நிலைமையில் காணப்படுகின்றது. அவ்வாறே அது கால்நடை வள	அந்த டோசர் இயந்திரத்தை பழுது பார்ப்பதற்கோ அல்லது ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கோ முறையான

	ஆம் ஆண்டு முதல் உழைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2013 முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் அந்த இயந்திரத்திற்காக ரூபா 6,000,000 பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது.	அபிவிருத்தி சபைக்கு மாற்றுவதற்காக ஆணையாளர் நாயகத்திடம் இருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.	அங்கீகாரத்தின் வேறு நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	கரடியனாறு கமநல சேவைக் குழுவில் நிர்மாணிக்கப்பட்ட விற்பனை நிலையக் கட்டிடத் தொகுதி மீளாய்வாண்டு வரை உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	கல்லடி கமநல சேவைக் குழுவிற்கு மண் பரிசோதனை செய்யும் நியம கட்டுப்பாட்டு ஆய்வு கூட உபகரணங்கள் 2020 ஆம் ஆண்டின் போது கையளிக்கப்பட்டிருந்த போதும் அதனைப் பயன்படுத்தி விவசாயக் காணிகளின் மண் பரிசோதனை மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மண் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உபகரணங்கள் உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6 பெறுகைகள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (அ) மற்றும் (ஆ) வழிகாட்டியின் பிரகாரம் 15 கமநல சேவைக் குழுக்களால் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படும்.	பிரதான பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2006 இன் அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (அ) மற்றும் (ஆ) வழிகாட்டி பின்பற்றப்படாமல் 03 கமநல சேவைக் குழுக்களால் மீளாய்வாண்டின் போது கூட்டு மொத்தமாக ரூபா 20,298,408 கொள்வனவுகள்	எதிர்காலத்தின் போது பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் கொள்வனவு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ)	03 கமநல சேவைக் குழுக்களால் மீளாய்வாண்டில் கூட்டுமொத்தமாக ரூபா 22,488,240 கொள்வனவு பெறுகைகள் நடைமுறைகள் பின்பற்றாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	எதிர்காலத்தின் போது பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் கொள்வனவு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.7 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில் பழுகாமம் கமநல சேவைக் குழுவினால் கட்டட பழுதுபார்த்தலுக்காக ரூபா 290,758 கிரயத்தில் கமநல அமைப்பிற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பணிகள் உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு முரணாக விவசாய அமைப்பினால் உப ஒப்பந்தத்திற்கு வழங்கி நிறைவேற்றப்பட்டிருந்தது. அவ்வாறே ஒப்பந்தத்திற்குரிய பணம் வங்கியிலிருந்து மீள பெற்றுக் கொள்வதற்காக விவசாய அமைப்பின் அங்கத்தவர்களின் அங்கீகாரம் இன்றி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கமநல சேவை பிரதி ஆணையாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் விவசாய அமைப்புக்களுக்கு மாத்திரம் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தப் பணிகள் விவசாய அமைப்புக்களின் ஊடாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.8 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
09 கமநல சேவைக் குழுக்களில் 05 வருடங்கள் முதல் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தொடர்ச்சியாக ஒரே சேவை நிலையத்தில் இருக்கின்ற 37 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிலையத்தில் சேவையாற்றுகின்ற பதவியணியினர் தொடர்பாக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம் தீர்மானிக்கின்றது. தற்போது மாவட்ட அலுவலகத்தால் இடமாற்றம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	இடமாற்றக் கொள்கையின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் நிலையேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக 17 கமநல சேவைகள் குழுக்களினால் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் நிதியாண்டில் செயற்பாட்டு திட்டத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5. கமநல வங்கிகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	06 கமநல வங்கிகளால் மீளாய்வாண்டிலும் கடந்த ஆண்டுகளிலும், விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகைகளுக்கு இடையே 222 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 13,691,762 ஆன நிலுவைக் கடன், வட்டி மற்றும் தண்டப் பண வட்டி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடனை குறித்துரைத்த காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2019 ஒக்தோபர் 22 ஆந் திகதிய இலக்கம் 7/12/5/4 என்ற கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் வெளி நிறுவனங்களில் அமுல்படுத்தப்படுகின்ற விவசாய அமைப்புக்களின் நிதியம், கமநல வங்கியில் வைப்புச் செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதும் விவசாய அமைப்புக்களில் காணப்படுகின்ற வங்கி மீதிகள்	இது தொடர்பாக கமநல அமைப்புக்களுக்கு அறிவித்தல் மேற்கொண்டு நிதியத்தை கமநல வங்கிகளில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடிதத்தின் ஆலோசனையின் பிரகாரம் செயற்படுவதற்கு வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

	17 கமநல வங்கிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(இ)	2012 பெப்ரவரி 21 ஆம் திகதிய இலக்கம் 04/2012 (கமநல வங்கி) என்ற கமநல அபிவிருத்தித் திணைக்கள சுற்றறிக்கையின் 3.2(iii) இன் பிரகாரம் விண்ணப்பதாரர் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கடன் தொகையில் ஆகக் குறைந்தது 10 சதவீதம் கமநல வங்கியின் குழுவின் சேமிப்பு ஒன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். எனினும் 10 சதவீத சேமிப்பு காணப்படாத 31 விவசாயிகளுக்கு சிறு குழுக்கள் ஊடாக கழுவாஞ்சிக்குடி கமநல வங்கியினால் ரூபா 50,000 வீதம் மீளாய்வாண்டில் ரூபா 1,550,000 விவசாயக் கடன் வழங்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் சுற்றறிக்கையை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கைக்கு முரணாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	கமநல வங்கிகள் தொடர்பாக 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய இலக்கம் 4/2012 என்ற சுற்றறிக்கையின் 3, 4, 6 இன் பிரகாரம் கமநல வங்கியினால் அதன் 19 பங்குதாரர்களுக்கு மாத்திரம் ரூபா 1,350,000 விவசாயக் கடன் வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டில் கரடியனாறு கமநல வங்கி நிதிச் சுற்றின் செயற்பாடற்றுக் காணப்படுகின்ற ரூபா 4,588,957 ஏனைய பங்குதாரர்களுக்கு கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்வரும் ஆண்டுகளில் விவசாயிகளுக்கு மேலதிக விளக்கமளித்தல், தெளிவுபடுத்துதல், வழங்கி விவசாய வங்கியின் கடனைப் பெற்ற பங்குதாரர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	2012 பெப்ரவரி 29 ஆந் திகதிய இலக்கம் 04/2012 (கமநல வங்கி) என்ற கமநல வங்கி முகாமையாளர், நிதிக் கட்டுப்பாட்டாளர் மற்றும்	எதிர்காலத்தில் குறித்துரைத்த பிரகாரம் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம் விவசாயக் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	அறிக்கையிடல் கமநல அபிவிருத்தித் திணைக்கள சுற்றறிக்கையின் 3.3 (i மற்றும் ii) இன் பிரகாரம் கடன் விண்ணப்பதாரர் எதிர்பார்த்த கடன் தொகையில் 10 சதவீத பெறுமதியான பங்குப் பணம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் 25 சதவீத சேமிப்பாக அவர்களின் பெயரில் பேணிச் செல்லப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டில் 25 சதவீத சேமிப்பு பணம் காணப்படாத 149 பங்குதாரர்களுக்கு ரூபா 6,625,000 விவசாயக் கடன் பழுகாமம் கமநல வங்கியால் வழங்கப்பட்டிருந்தது.		
(ஊ)	மீளாய்வாண்டில் ‘‘சித்தமு’’ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிரப்பல் காணி பயிற்சியாளர்கள் 35 பேர்களுக்கு தான்தாமலை கமநல வங்கியினால் ரூபா 4,035,000 கடன் வழங்கப்பட்டிருந்தது. அந்த 35 விவசாயிகளுக்கு மாத்திரம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தொடர்ச்சியாக கைத்தொழில் முயற்சியாளர் கடன் வழங்கியதன் காரணமாக புதிய முயற்சியாளர்களை இனங்கண்டு அந்த கடன் வசதிகள் அவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் புதிய தொழில் முயற்சியாளர்களைத் சேர்த்துக் கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும்.	புதிய தொழில் முயற்சியாளர்களைத் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
நிலையத்திற்கு உரிய சில்லறைச் செலவினம் யாவும் பிரதான காசேட்டின் மூலம் மேற்கொள்ளல், நிலையத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற நானாவித வருமானம் மற்றும் விற்பனைகளில் இருந்தான பணத்தில் நாளாந்த சில்லறைச் செலவினங்கள் செய்யப்பட்ட	சில்லறைச் செலவினம் சில்லறைக் காசேட்டின் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சில்லறைச் செலவினம் சில்லறைக் காசேட்டின் மூலம் மேற்கொள்வதற்கும், கையில் உள்ள பணத்தை வங்கியில் இடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பின்னர் சேமிக்கப்படுகின்ற தொகையின் அளவு கையில் உள்ள காசாக பேணி மிகுதிப் பணம் வங்கியின் நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை அமுல்படுத்துவதற்கு 15 கமநல சேவைக் குழுக்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.